பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கான

பஞ்சாமிர்தம் தயாரிக்க 'ஆவின்' நெய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது!

சமூக வலைதளத்தில் பொய் செய்தி பரப்பியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை - பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மறுப்பு செய்தி!

பழநி, செப்.21-

சமூக வலைதளத்தில் இருவர் திருப்பதி லட்டு தயாரிக்கும் நிறுவனமே பழநி திருக்கோயிலுக்கு பஞ்சாமிர்தம் தயாரிக்க நெய் விநியோகம் செய்யப்படுவதாக பொய்ச் செய்தியை பரப்பி வருகின்றனர். அவர்கள் மீது குற்றவியல் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிக்க ஆவின் நெய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்று பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மறுப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மறுப்புச் செய்தி வருமாறு :

X.com என்ற சமூக தளத்தில், திரு Vinoj P Selvam (@VinojBJP), மற்றும் திரு Selva Kumar (@Selvakumar_IN) ஆகியோர் "திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நெய் விநியோகம் செய்த திண்டுக்கல் A.R. Foods நிறுவனம் தான் பழனி முருகன் கோவிலுக்கும் நெய் விநியோகம் செய்கிறது" என்றும், "திருப்பதி லட்டு தயாரிக்க சப்ளை செய்யப்பட்ட நெய்யில் மாட்டு இறைச்சி கொழுப்பு, பன்னி இறைச்சி கொழுப்பை கலந்து விற்ற உத்தமர் ராஜசேகர்தான் (AR Foods) பழனி முருகன் கோவிலுக்கும் நெய் சப்ளை செய்கிறார்" என்றும், பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பக்தர்களை ஏமாற்றும் பொருட்டும், தமிழ்நாடு அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், பக்தர்கள் மத்தியில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கவும், மதக்கலவரத்தை தூண்டிவிட்டு மனித உயிர் இழப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிடவும் திட்டமிட்டு அவதூறு செய்திகளை மேற்படி இரு நபர்களும் பரப்பியுள்ளனர்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் மூன்றாவது படை வீடாகத் திகழும் பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தயார் செய்யப்படும் தரமான பஞ்சாமிர்தத்தினை அருட்பிரசாதமாக பெற்றுச் செல்கின்றனர்.

பஞ்சாமிர்தம் தயார் செய்வதற்குத் தேவையான வாழைப்பழம், நாட்டுச்சர்க்கரை, தேன், பேரீச்சம்பழம், ஏலக்காய், கற்கண்டு மற்றும் நெய் ஆகிய முதல்தரமான மூலப்பொருட்களே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அவற்றில் நெய்யினை திண்டுக்கல் ஆவின் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் இத்திருக்கோயிலின் பஞ்சாமிர்த தயாரிப்பினை அவ்வப்போது உணவுப்பாதுகாப்பு துறையால் தரப்பரிசோதனை செய்து வரப்படுகிறது. பஞ்சாமிர்த தயாரிப்பு மூலப்பொருட்களில் எவ்வித கலப்பட பொருள்களோ, தரம் குறைந்த பொருள்களோ இருப்பதாக உணவுப் பாதுகாப்புத் துறையால் எப்போதும் தெரிவிக்கப்பட்டதில்லை.

மேலும் மேற்படி அவதூறு செய்திகளைப் பரப்பிய நபர்கள் மீது உரிய குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே பழனி திருக்கோயில் நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், பக்தர்கள் மத்தியில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கவும், மதக்கலவரத்தை தூண்டிவிட்டு மனித உயிர் இழப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிடவும் திட்டமிட்டு அவதூறு செய்திகளை யாரும் நம்ப வேண்டாம் என பக்தர்களையும் பொது மக்களையும் திருக்கோயில் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இதுபோன்ற அவதூறான செய்திகளை சமூக ஊடகங்களில் எவரும் வெளியிடவோ பரப்பவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் சட்ட மன்றத் தொகுதிகுட்பட்ட கடம்பத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 163 மாணவ மாணவிகளுக்கு அரசு விலையில்லா மிதிவண்டியினை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் வழங்கினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, பிரசன்னா குமார், ஆசிரியர் சா.அருணன், தலைமை ஆசிரியை கா.குமாரிகுட்டி. பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வா.ராஜசேகர். உதவி தலைமை ஆசிரியர் ஜாய்ஸ்ராணி, பவுல்ராஜ். சேகர் , கிரிஜா உதயமூர்த்தி. மற்றும் பள்ளி ஆசிரியர் மாணவனை உடன் இருந்தனர்.

கழக மகளிர் அணி சார்பில்- "கலைஞர் 100 வினாடி-வினா!"

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர் செப். 21 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு முன்னிட்டு "கலைஞர் 100 வினாடி -வினா" நடைபெறுவதை ஒட்டி கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார். அதன் விவரம் வருமாறு:

கழகத் தலைவர்-முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் அறிவுறுத்தல் படி, நாளை (22.09.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி அளவில், வடலூர் பண்ருட்டி சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் "கலைஞர் 100" வினாடி-வினா கடலூர் மண்டலம் சார்பாக நடைபெறவுள்ளது. அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னால், இந்நாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, நிர்வாகிகள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளில் அரசுத் துறை - தனியார் நிறுவனங்களின் மூலம்

68,039 நபர்களுக்கு பல்வேறு அமைப்புகளில் பணி நியமனங்கள்!

தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.21-

கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுத் துறைகளில் 68,039 இளைஞர்களுக்கும், தனியார் நிறுவனங்களில் 5,08,055 இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என அரசின் செய்திக் குறிப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதில் இருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாக 34,384 நபர்களுக்கும், பல்வேறு அரசுத்துறைகளில் நேரடி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளின் வாயிலாக 33,655 நபர்களுக்கும் என மொத்தம் 68,039 நபர்களுக்குப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த சுதந்திர தின விழா உரையின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்திருந்தவாறு, அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 75,000 இளைஞர்கள் பல்வேறு அரசு துறைகளில் பணி நியமனம் செய்ய ஏதுவாக சம்பந்தப்பட்ட அமைப்புகள், அரசுத் துறைகள் வாயிலாக ஆயத்தப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தி வரும் தொகுதி 4 தேர்வைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு துறையும் தங்களது காலிப் பணியிடங்களை நேரடியாகத் தெரிவித்து தேவையான பணியாளர்களை பெற்று வருகிறது. தேர்வாணையம் வெளியிடும் தேர்வு அறிவிக்கையில் தெரிவிக்கப்படும் காலி பணியிடங்கள் மாறுதலுக்கு உட்பட்டது. கடந்த மூன்று முறை நடத்தப்பட்ட தொகுதி 4 தேர்வுகளை ஒப்பிடுகையில் அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் முறையே 9351, 6491 மற்றும் 7301, தேர்வுகள் நிறைவு பெற்று பணியிடங்கள் நிரப்பப்படுகையில் முறையே 11949, 9684 மற்றும் 10139 என அதிகரிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டை பொறுத்தவரையில் 6244 என அறிவிக்கப்பட்டிருந்த காலிப்பணியிடங்கள் தற்பொழுது 6724 என அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை, பணியிடங்கள் நிரப்பப்படும் வரை மேலும் அதிகரிக்கும்.

இது மட்டுமல்லாமல் பல்வேறு அரசு துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தேர்வாணையம் போன்ற அமைப்புகளின் வாயிலாக இரண்டு ஆண்டுகளுக்குள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருந்தவாறு மேலும் 75,000 இளைஞர்கள் அரசு பணிகளில் அமர்த்தப்படுவார்கள்.

அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து தொழில் முன்னேற்றம் குறித்து எடுத்து வரும் பல்வேறு முன்னெடுப்புகள் காரணமாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறைகளின் வாயிலாகவும், "நான் முதல்வன்" திட்டம் உள்ளிட்ட சிறப்பு முயற்சிகளின் காரணமாகவும் கடந்த மூன்று ஆண்டுகளில் அரசின் முயற்சியால் 5,08,055 தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன் மேம்பாட்டில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் "நான் முதல்வன்" திட்டத்தின் வாயிலாக பொறியியல், தொழில்நுட்பம், கலை, அறிவியல், பாலிடெக்னிக் போன்ற படிப்புகள் பயிலும் 27,73,847 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

படித்த, தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்று தரும் பணியினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாதவரம் எஸ். சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் சிறப்புரை!

8வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

டி.சி.வி. மணிகண்டன் அறிக்கை ! தி.மு.தனியரசு - குறிஞ்சி கணேசன் பங்கேற்பு!

சென்னை, செப். 21-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 8வது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்ட தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் இன்று (21.9.2024 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் ராம் சீதாலட்சுமி திருமண மண்டபம், டி.எச். ரோடு, திருவொற்றியூரில் நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளார்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமை வகிக்கிறார்.

8வது மாமன்ற உறுப்பினர் வி.ராஜகுமாரி விஜயன், ஆர்.சி.ஆசை தம்பி ,எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், இரா.குமரேசன், கே.பிரபாவதி இரா.முருகேசன், டி.டி.எம்.பாபு, ப.சந்தானகிருஷ்ணன், அ.சுப்பிரமணியன், வி.ஆர்.சீனிவாசன், மா. கணேசன், ஆர்.சின்ன பாப்பா, கே.முகமது அபூபக்கர் சித்தீக், தீபம் எஸ்.ஷங்கர், எஸ்.மூர்த்தி, ஜி.முனுசாமி வை.செந்தில் வேலன், தி.மு.சரவணன், மா.வெ.ந. உதயகுமார், சூ. சந்தானம், ஏ. அருளானந்தம், ஜி.செல்வதாஸ், பா. அரங்கநாதன், சுகுந்த முனுசாமி, ஜிம் பரசுராமன், எம்.எஸ்.திணேஷ்வேலன், மனோஜ் ஆகியோர் வரவேற்கின்றனர் .

கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., குறிஞ்சி எஸ்.கணேசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

ஓய் .நந்திவர்மன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு 8வது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலைதுறை அமைச்சர்,பெருநகர சென்னை வளர்ச்சிகுழும தலைவர்,சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சொ.வேலு எம்.சி, முன்னிலையில். 78வது வட்ட கழக செயலாளர் சு.மனோகர் தலைமையில் வட்ட கழகம்தோறும் 17 இடங்களில் கழக கொடியேற்றி,இனிப்பு வழங்ங்கபட்டது. மேலும் தாணா தெரு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கபட்டது. இதில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிசந்திரன், கழக ஊடகபிரிவு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன்,பரிதி இளம் சுருதி,கலை இலக்கிய பகுத்தறிவு பிரிவு மாவட்ட அமைப்பாளர் ஜி.தாமோதரன்,துணை அமைப்பாளர் எம்.ஜி. செல்வம், தில்லை குமார், க.ந்ந்தீஸ்வரன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரியை

செப். 30 ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,செப்.21-

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியினையும், கட்டணங்களையும் கடைசி நாளான செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அனைத்து வேலை நாட்களிலும், சனிக்கிழமைகளிலும் இயங்கும்.

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி/ கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை அலுவலகங்களில் காசோலை/ வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது. மேலும் நுகர்வோர்கள் தங்களது நிலுவை தொகையினை https://bnc.chennaimetrowater.in/#/public/cus-login என்ற வலைத்தளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இ-சேவை மையங்கள் மற்றும் UPI, QR குறியீடு, iPoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 30.09.2024 - க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - கயல்விழி செல்வராஜ் மற்றும் இல.பத்மநாபன் - கே.ஈஸ்வரசாமி எம்.பி. பங்கேற்பு!

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் ரேக்ளா பந்தயம்!

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிக்கை!

திருப்பூர், செப்.21-

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநிலம் தழுவிய மாபெரும் ரேக்ளா பந்தயம் என்று விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், மாநிலம் தழுவிய மாபெரும் ரேக்ளா பந்தயம், வருகிற ஞாயிற்றுக்கிழமையன்று (22.09.2024) மாலை 3.30 மணியளவில், சாமராயன்பட்டி, உடுமலைப்பேட்டையில் நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிக்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், எம்.சி. தலைமையேற்கின்றார். பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலை பொறுப்பேற்கின்றார். திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆ.ருத்ரப்பன் வரவேற்புரையாற்றுகின்றார், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அவைத்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராம கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குகின்றார்!

இப்போட்டியினை செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர். மேலும் இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கு.சண்முகசுந்தரம், கோவை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளரும் ரேக்ளா தலைமைச் சங்க பொறுப்பாளருமான சி.ஜெயபிரகாஷ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, உடுமலை நகரக் கழகச் செயலாளர் செ.வேலுச்சாமி, உடுமலை நகர மன்றத் தலைவர் எம்.மத்தின், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வெ.மகாலிங்கம், சி.சியாம் பிரசாத், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் நா.ராமசாமி, எம்.ஆர்.பாபு, யு.என்.பி. குமார், எம்.பர்வத வர்த்தினி, மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஏ.சாகுல் அமீது, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.எஸ்.தங்கராஜ், குமரலிங்கம் பேரூராட்சி மன்றத் தலைவர் சர்மிளாபானு ஜாகீர் உசேன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கே.அழகர்சாமி, அணியின் மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.கார்த்திக், பைந்தமிழ் பாரி, எஸ்.ஆர்.பார்த்திபன், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர். கோபால்ராம், மு.வாசிம் ராஜா, சுரேஷ்.ஜெ.மனோகரன், வே.கௌதமன், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.சக்திகுமார், மாவட்டக் கழக விவசாய அணி அமைப்பாளர் வி.ரகுபதி, வழக்கறிஞரணி அமைப்பாளர் டி.எஸ்.பொன்ராஜ், இலக்கிய அணி அமைப்பாளர் என்.தங்கவேல், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மா.கண்ணிமுத்து, மகளிரணி அமைப்பாளர் செ. அனிதா செல்வராஜ், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எல்.லதா, திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் கே.ஐயப்பன், ஆர்.மோகன்ராஜ், கே.கவின்ராஜ், என்.கனகராஜ், பா.சசிகுமார், எஸ்.ரபியுல்லா, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆ.நவீன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எஸ்.கே. மெய்ஞானமூர்த்தி, கே.செந்தல்குமார், டி.செழியன், எஸ்.ராஜமாணிக்கம், சி.கிரி, எம்.எஸ்.முரளி, எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல், என்.கமலக்கண்ணன், பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆர்.ஏ. சாதிக் அலி, என்.பாலகிருஷ்ணன், ஏ.பாலகிருஷ்ணன், வெ.உதயகுமார், எம்.எஸ்.ஆறுச்சாமி, அ.அகத்தூர்சாமி, கே.காளிமுத்து, ஆகியோர் பங்கேற்கின்றனர். குமரலிங்கம் பேரூர்க் கழகச் செயலாளர் எம்.ஆச்சிமுத்து நன்றியுரையாற்றுகின்றார்.

இவ்வாறு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி. தெரிவித்துள்ளார்.

மாதவரம் எஸ். சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் சிறப்புரை!

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி - வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, செப்.21-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் - 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (21.9.2024) கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது. அதன் விவரம் வருமாறு:-

இன்று (21.9.2024) மாலை 5 மணிக்கு ராம் சீதாலட்சுமி திருமண மண்டபம் கூட்ட ஏற்பாடு 8வது வட்ட செயலாளர் டி.சி.வி.மணிகண்டன்,

இன்று (21.9.2024) மாலை 6 மணிக்கு இடம் வன்னியர் திருமண மாளிகை 11வது வார்டு குறுத்து சி.முனுசாமி,

இன்று (21.9.2024) மாலை 7 மணிக்கு இடம் சங்தோபேன் கிட் ஹால்நிகழ்ச்சி ஏற்பாடு க.வீ.சத்தீஷ்குமார் 12வது வட்ட செயலாளர் ஆகியோர் செய்துள்ளனர்.

பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றி யூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், திருவொற்றி யூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொது குழு உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் பாக முகவர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு எம்.சி. தெரிவித்துள்ளார்.

கி.தேவன் தலைமை !எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

41வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ஆர்.டி.சேகர் சிறப்புரை ! கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர், நந்தனம் நம்பிராஜன் பங்கேற்பு!

சென்னை செப். 21 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 41வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (21.9.2024 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஹாப்பி பார்ட்டி ஹால், கொருக்குப் பேட்டை, சென்னை-21ல் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் கி.தேவன் தலைமை வகிக்கிறார். ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலை வகிக்கிறார். எஸ்.குணசேகரன், ப.தேவராஜ், கே.அரிபாபு, என்.லோகநாதன், ஜி.உமா, பி.தன்ராஜ், இ.ரங்கநாதன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, நந்தனம் நம்பிராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாஸ்.டி.வெங்கடேசன், மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், இ.ரவிக்குமார், டி.சங்கர், வீ.மூர்த்தி, என்பீல்டு துரைராஜ், முருகன், பி.விஜியா, கே.முரளி, கே.காளிதாஸ், நீலிமா ரவிக்குமார், டி.விமல், பாக முகவர்கள் : பி.யுவராஜ், எம்.ரேவதி, வி.வித்யா, வி.டில்லிகாந்தி, எம்.பூபதி, துரைகண்ணு, பி.இளமந்தையா, ஜெ.கோபி, ஜே.ஜெயராஜ், எம்.பொன்ராஜ், வி.வினிதா, டி.ரஞ்சித், இ.விவேக், லி.முத்து, எம்.மணிகண்டன், எஸ்.பாஸ்கர், எஸ்.கிருஷ்ணகுமார், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

அண்ணாநகர் என்.முருகேசன், எஸ்.நரேந்திரகுமார், கே.தனலட்சுமி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் வணிக வளாகத்தில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருச்சிலைக்கு 146 வது பிறந்தநாளை முன்னிட்டு மாநில மீனவரணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி ஏற்றார். இதனை தொடர்ந்து ஏழை எளியவர்கள் முதியோர்கள் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்டோர்களுக்கு புடவை வழ